தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 236 | 4 Pages | 04.07.2026 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 236 | 4 பக்கங்கள் | 04.07.2026 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**பல்லார்பகைகொளலிற்பத்தடுத்ததீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்**

**விளக்கம்:**
**நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் பலருடைய பகையைத் தேடிக்கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை உடையதாகும்.**

# முதல்அமைச்சர் விஜய்யின் பெரம்பூர் தொகுதியில் பொதுமக்கள் புகார் அளிக்க பிரத்யேக செயலி

சென்னை, ஜூலை 4

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தவெக தலைவரும், முதல் அமைச்சருமான விஜய் பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதில் பெரம்பூர் தொகுதியில் திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகரை எதிர்த்து போட்டியிட்டு 53,715 வாக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றார்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி ஒரு தொகுதியை மட்டுமே வைத்திருக்க வேண்டும் என்பதால், அவர் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். தற்போது அவர் பெரம்பூர் தொகுதியின் எம்.எல்.ஏ.வாக செயல்பட்டு வருகிறார். முதல்0அமைச்சர் விஜய் பதவியேற்று 50 நாட்களை கடந்தும், இதுவரை தனது சொந்த தொகுதியான பெரம்பூர் பக்கமே வரவில்லை என்று அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டது . எனினும் கடுமையான நிர்வாக பணிகள் மற்றும் நேரமின்மை காரணமாகவே தொகுதிப் பயணங்களில் தாமதம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், முதலமைச்சர் விஜய்யின் பெரம்பூர் தொகுதி மக்கள் தங்களின் தேவைகள், குறைகள், மற்றும் கோரிக்கைகளை எளிதாகத் தெரிவிக்கும் வகையில் பிரத்தியேகமாக மொபைல் செயலி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயலியின் மூலம் பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள குடிநீர், சாலை, மின்சாரம் மற்றும் துப்புரவு போன்ற பல்வேறு அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த புகார்களை நேரடியாக முதல்அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முடியும்.




அளிக்கப்பட்ட புகாரின் நிலையை நேரடியாக அறிந்து கொள்ள உதவும் வகையிலான வசதிகளுடன் மொபைல் செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த மொபைல் செயலி பெரம்பூர் தொகுதி மக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே ஒரு பாலமாக செயல்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொபைல் செயலியின் சிறப்பம்சங்கள்:

★ முதல்அமைச்சரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் இச்செயலியின் வாயிலாகப் பொதுமக்கள் பதிவு செய்யும் புகார்கள் அனைத்தும், நேரடியாக முதல்அமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்பப்படும்.

★ இந்தச் செயலி மூலம் பொது மக்கள் அளிக்கும் புகார்கள் மீது, குறைந்தபட்சம் 3 நாட்களுக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவிக்கும் குடிநீர், மின்சாரம், சாலை மற்றும் துப்புரவு போன்ற பிரச்சினைகளுக்கு அதிகபட்சமாக 10 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டு, அவற்றின் தற்போதைய நிலை குறித்து மக்களுக்கு விரிவான பதில் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ பெரம்பூர் தொகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள நவீன சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், இந்த செயலிக்கான பிரத்யேக கண்காணிப்பு அமைப்பு செயல்படும்.

★ தினமும் எத்தனை புகார்கள் வருகின்றன, அவை எந்தெந்த துறைகள் சார்ந்தவை என்பதைத் துல்லியமாகத் தனித்தனியாகப் பிரித்து கண்காணிக்கும் வகையில் ஒரு நவீன 'டேஷ்போர்ட்' அமைப்பும் இதில் உருவாக்கப்பட்டுள்ளது.

அறிமுகம் செய்கிறார் விஜய்

தலைமைச் செயலகத்தில் மட்டுமே முதல்அமைச்சர் அலுவலகம் இயங்கி வந்தாலும், பெரம்பூர் தொகுதி மக்களுக்காக ஒரு பிரம்மாண்ட சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் (MLA Office) தயார் செய்யப்பட்டுள்ளது. இது முதல் அமைச்சரின் சொந்த தொகுதி என்பதால், பொதுமக்கள் வசதியாகவும், நேரடியாகப் புகார்களை மனுக்களாக அளிப்பதற்கும் ஏதுவாகப் பல நவீன மாற்றங்களுடன் இந்த அலுவலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மொபைல் செயலி மற்றும் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் ஆகிய இரண்டையும் அடுத்த வாரத்தில் முதல்அமைச்சர் விஜய் முறைப்படி திறந்து வைக்க உள்ளதாக கூறப்படுகிறது. இந்த நவீன செயலி, பெரம்பூர் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## பாகிஸ்தான்: பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்து 40 பேர் பலி



லாகூர், ஜூலை 5

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் இருந்து பெஷாவருக்கு இன்று பஸ் சென்றுகொண்டிருந்தது. அந்த பஸ்சில் பெண்கள், குழந்தைகள் உள்பட 48 பேர் பயணம் மேற்கொண்டனர்.

கைபர் பக்துவா மாகாணம் டிரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில் மலைப்பாங்கான பகுதியில் சென்றபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் பஸ்சில் பயணம் செய்த 40 பேர் உயிரிழந்தனர். மேலும், 8 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து குறித்து தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். முதற்கட்ட விசாரணையில் பஸ்சின் பிரேக் செயலிழந்ததாலேயே விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## தென் ஆப்பிரிக்கா: சட்டவிரோத அகதிகளை வெளியேற்றக்கோரி போராட்டம் 1,000 பேர் கைது



தென் ஆப்பிரிக்காவில் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் எந்தவித ஆவணமும் இன்றி சட்டவிரோதமாக வாழ்ந்து வருகின்றனர். ஆப்பிரிக்காவின் பல்வேறு நாடுகளை சேர்ந்த அகதிகள் தென் ஆப்பிரிக்காவில்வாழ்ந்துவருகின்றனர். அதேவேளை, தென் ஆப்பிரிக்காவில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பின்மை சூழ்நிலை சட்டவிரோத அகதிகளால் அதிகரித்து வருவதாக உள்ளூர் மக்கள் கருதுகின்றனர்.

இதனால், தென் ஆப்பிரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ள அகதிகளை கண்டறிந்து அவர்களின் சொந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. இது தொடர்பாக பல்வேறு அமைப்புகள் போராட்டத்தை கையில் எடுத்துள்ளன. கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் இப்போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. போராட்டத்தின் முடிவில் வன்முறை சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன. இந்நிலையில், சட்டவிரோத அகதிகளைநாட்டை விட்டு வெளியேற்றக்கோரி நேற்று நடந்த போராட்டத்தில் நாடு முழுவதும் 1000 பேரை போலீசார் கைது செய்துள்ளனர். அதேவேளை, போராட்டத்தின் போது கடைகள் சூறையாடப்பட்டு அங்குள்ள பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. மேலும், போராட்டத்தின்போது நடந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவோம் என்று போராட்டக்குழுவினர் அறிவித்துள்ளதால் தென் ஆப்பிரிக்காவில் பரபரப்பான சூழ்நிலை உருவாகியுள்ளது.

## சொகுசு கப்பலில் பரவிய நோரோ வைரஸ் 125 பேர் பாதிப்பு



புளோரிடா, ஜூலை 4

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து கரீபியன் தீவுகளை நோக்கி "ரூபி பிரின்சஸ்" என்ற பிரமாண்ட சொகுசு கப்பல் ஒன்று ஆயிரக்கணக்கான பயணியருடன் கடந்த மே மாதம் உற்சாகமாக புறப்பட்டது. பயணம் பாதியைக் கடந்த நிலையில், திடீரென சிலருக்கு கடுமையான வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

முதலில் உணவு நச்சுத்தன்மை என்று கருதப்பட்ட நிலையில், அடுத்த சில மணி நேரங்களிலேயே பாதிப்பு எண்ணிக்கை மின்னல் வேகத்தில் உயர்ந்தது. கப்பல் ஊழியர்களில் சிலரும் இதில் பாதிக்கப்பட்டனர். கப்பலில் இருந்த மருத்துவக் குழுவினர் உடனடியாக பரிசோதனை செய்ததில், இது மிக மோசமாக பரவக்கூடிய 'நோரோ வைரஸ்' தொற்று என்பது உறுதி செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கப்பலில் உள்ள தனி அறைகளில் தங்க வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தநிலையில் அலாஸ்கா மற்றும் கனடாவுக்கு சென்ற "ரூபி பிரின்சஸ்" சொகுசு கப்பலில் திடீரென பரவிய "நோரோவைரஸ்" தொற்று 20 நாள் பயணத்தில் 102 பயணிகள் மற்றும் 23 பணியாளர்கள் என மொத்தம் 125 பேர் வாந்தி, வயிற்றுப்போக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். சான் பிரான்சிஸ்கோவில் கப்பல் தனிமைப்படுத்தப்பட்டு கிருமி நீக்கம் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

## புகழ்பெற்ற எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் மீது ஏறிய காதல் ஜோடி கைது... ஜாமீனில் விடுதலையாகி முத்த மழை பொழிந்தனர்

வாஷிங்டன், ஜூலை 4

ரஷியாவை சேர்ந்த இவான் ஆஞ்சலா காதல் ஜோடியை, அமெரிக்காவில் உள்ள எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தில் ஆபத்தான முறையில் ஏறியதற்காக போலீசார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் உள்ள உலகப் புகழ்பெற்ற எம்பயர் ஸ்டேட் கட்டிடம் 1,454 அடி உயரம் கொண்டது. இந்த கட்டிடத்தின் உச்சிக்கு ரஷியாவைச் சேர்ந்த ஆஞ்சலா மற்றும் இவான் என்ற காதல் ஜோடி பாதுகாப்பு கயிறுகள் எதுவும் இன்றி ஆபத்தான முறையில் ஏறினர்.

அங்கு காற்றில் பறந்தபடி உலக அமைதி மற்றும் காதலின் சக்தி குறித்த வாசகம் அடங்கிய கொடி ஒன்றை பறக்கவிட்டனர். பின்னர், அந்த அந்தரத்து உச்சியில் வாலிபர் இவான் முழங்காலிட்டு, தன் காதலியிடம் திருமண விருப்பத்தை கூறி மோதிரம் அணிவித்தார். இதனைப் பார்த்து கீழே நின்ற பொதுமக்கள் அதிர்ச்சியில் உறைந்தனர். இது குறித்து தகவலறிந்து விரைந்து வந்த நியூயார்க் போலீசார், கட்டிடத்தின் உச்சிக்குச் சென்று அந்த சாகச காதல் ஜோடியை பத்திரமாக மீட்டனர். தொடர்ந்து, பொதுமக்களுக்கு ஆபத்து விளைவித்தல் மற்றும் அனுமதியின்றி அத்துமீறி நுழைந்த குற்றங்களுக்காக இருவரையும் போலீசார் அதிரடியாகக் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

பின்னர் அந்த காதல் ஜோடியை மான்ஹாட்டன் நகர கோர்ட்டில் போலீசார் அஜர்படுத்தினர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, இருவருக்கும் நிபந்தனை ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார். ஜாமீனில் வெளிவந்த இவான்ஆஞ்சலா ஜோடியை பத்திரிகையாளர்கள் பின்தொடர்ந்து சென்றனர். அப்போது அங்கிருந்த ஒருவர், 'நீங்கள் இப்போது முத்தமிட விரும்புகிறீர்களா?' என்றார். உடனே இவான்ஆஞ்சலா ஜோடி அங்கேயே நின்று முத்த மழை பொழியத் தொடங்கினர். இதைக் கண்டு அங்கிருந்தவர்கள் உற்சாகத்தில் ஆர்ப்பரித்தனர். பின்னர் அந்த காதல் ஜோடி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.



திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், கோவிந்தகுடி கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் 225 பயனாளிகளுக்கு ரூ.55 லட்சத்து 48 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ. மோகனச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

## தனியார் கல்லூரிகளில் துணை மருத்துவ படிப்புகளுக்கு புதிய கட்டணங்கள் நிர்ணயம்

சென்னை, ஜூலை 4

தமிழகத்தில் நடுத்தர வர்க்க மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவை நனவாக்கும் வகையிலான ஒரு மிக முக்கியப் புதிய மைல்கல் திட்டத்தைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்தியுள்ளது. தமிழகத்தில் உள்ள தனியார் சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பயிற்றுவிக்கப்படும் பல்வேறு துணை மருத்துவப் படிப்புகளுக்கு, கல்வித் கட்டண நிர்ணயக் குழுவின் பரிந்துரையின் பேரில் வரலாற்றிலேயே முதன்முறையாகத் தமிழக அரசு முறைப்படியான புதிய கட்டண அமைப்பை நிர்ணயம் செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

முன்னதாகத் தனியார் கல்லூரிகள் தங்களுக்குத் தோன்றியவாறு பல்லாயிரக்கணக்கில் கட்டணங்களை வசூலித்து வந்த நிலையில், நர்சிங் மற்றும் பட்டயப் படிப்புகளுக்கான கட்டண வரம்பு முறைப்படுத்தப்பட்டுள்ளது. டிப்ளமோ நர்சிங் இப்பாடப் பிரிவிற்கு அரசு ஒதுக்கீட்டு இடங்களின் கீழ் சேரும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு 35,000 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களின் கீழ் சேரும் மாணவர்களுக்கு ஆண்டுக்கு 75,000 கட்டணமாக வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. துணை செவிலியர் மகப்பேறு பட்டயப் படிப்புக்கு அரசு ஒதுக்கீட்டில் 30,000 மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டில் 60,000 புதிய கட்டணமாக அறிவிக்கப்பட்டுள்ளது. டிப்ளமோ பார்மசி பாடநெறிக்கு அரசு ஒதுக்கீட்டில் 25,000 மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு ஆண்டுக்கு 50,000 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. டிப்ளமோ படிப்புகள் மட்டுமின்றி, பி.எஸ்சி நர்சிங் உள்ளிட்ட 4 ஆண்டுகால இளநிலை பட்டப் படிப்புகளுக்கான அதிகாரப்பூர்வ கட்டண விபரங்களையும் தமிழக அரசு வெளியிட்டுள்ளது. பி.எஸ்சி நர்சிங் - போஸ்ட் பி.எஸ்சி நர்சிங் பாட திட்டத்திற்கு அரசு ஒதுக்கீட்டுப் பிரிவில் ஆண்டுக்கு 60,000 மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டுப் பிரிவில் 1.20 லட்சம் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பி.பார்ம், பி.பி.டி., தொழில்முறை சிகிச்சை மற்றும் இளநிலை அலைடு ஹெல்த் சயின்ஸ் படிப்புகளுக்கு அரசு ஒதுக்கீட்டுத் தொகையாக ஆண்டுக்கு 50,000 மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டுத் தொகையாக 1 லட்சம் புதிய கட்டணமாக அமலுக்கு வந்துள்ளது. அடுத்த மூன்று கல்வி ஆண்டுகளுக்கும் இதே சீரான அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டுக் கட்டண விவரங்கள் பொருந்தும் எனத் தமிழக அரசு தெளிவுபடுத்தியுள்ளது. மேலும், இக்கல்வி ஆண்டிற்கான துணை மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் ஜூலை 7ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்வு முகமை அறிவித்துள்ளது.

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் எம்பிபிஎஸ் மற்றும் பிடிஎஸ் படிப்புகளுக்கு அரசு நிர்ணயித்த கட்டணத்தைக் காட்டிலும் கூடுதலாக வசூலித்த 5 முன்னணித் தனியார் கல்லூரிகள் மீது விசாரணை நடத்த மருத்துவக் கல்வி இயக்ககம் ஆய்வுக்குழு அமைத்துள்ள சூழலில், நடுத்தர மாணவர்களின் நலன் கருதித் துணை மருத்துவப் படிப்புகளுக்கும் இந்த ஆண்டு முதல் புதிய கட்டண வரம்பு கொண்டு வரப்பட்டிருப்பது ஏழை மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

## கந்தர்வகோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப்பள்ளி சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் உலக பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம் கடைபிடிப்பு




புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அக்கச்சிப்பட்டியில் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் உலக பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். கணிதப் பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய தலைவரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா உலக பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம் குறித்து பேசும் பொழுது உலக பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 3 அன்று உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. ஒற்றைமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், துணி அல்லது சணல் பைகள் போன்ற மாற்றுகளை ஊக்குவிக்கவும் இந்த நாள் விழிப்புணர்வு ஏற்படுகிறது.

இந்த பிளாஸ்டிக் பொருட்கள் மட்குவதற்கு 100 முதல் 500 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். இது பூமிக்கு நிரந்தர ஆபத்தானது.

ஆபத்தானது. மாணவ மாணவிகள் பெற்றோர்களிடம் கடைகளுக்கு செல்லும் போது துணிப்பையில் பொருட்களை வாங்கி வர வேண்டும் எனவும், பெற்றோர்கள் பொது மக்களிடம் பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள் குறித்து விளக்கி கூற வேண்டும். ஒவ்வொருவரும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தாமல் தவிர்த்தால் முற்றிலுமாக பிளாஸ்டிக் இல்லா உலகத்தை உருவாக்க முடியும் எனவும், சுற்றுச்சூழலை பாதுகாக்க அனைவரும் பிளாஸ்டிக்பொருட்களைமுற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என்று பேசினார். நிறைவாக மாணவர்கள் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்த மாட்டோம் என உறுதி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ம.தி.மு.க.வைச் சேர்ந்த அரியலூர் மாவட்டம், மாவட்ட பொருளாளர் வீர.புகழேந்தி அவர்கள், தலைமையில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த மாவட்ட துணைச் செயலாளர் கோ.பழனிவேல், மாவட்ட இலக்கிய அணி துணைத் தலைவர் அ.ஜாகிர்உசேன், நகர துணைச் செயலாளர் இளங்கோவன், ஜெயங்கொண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எ.இரவி, ஜெயங்கொண்டனம் நகரம், வட்டச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வேல்முருகன், ஜெயங்கொண்டம் நகர இளைஞர் அணி புருசோத்தமன், நகர மாணவர் அணி ராஜா ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர். அதுபோது, கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், அரியலூர் மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், ஜெயங்கொண்டம் நகரச் செயலாளர் வெ.கொ.கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

# தூத்துக்குடி நோக்கி வந்த கப்பலுக்குள் புகுந்த கடற்கொள்ளையர்கள்; இந்திய கடற்படையை பார்த்ததும் தப்பி ஓட்டம்



ஏடன், ஜூலை 4

தூத்துக்குடி நோக்கி வந்த கப்பலுக்குள் புகுந்த கடற்கொள்ளையர்கள் இந்திய கடற்படையை பார்த்ததும் தப்பி ஓடி விட்டனர்.

ஏடன் நாடு வழியே எம்.வி. கோல்டன் ஆர்சனெல் என்ற பெயருடைய, வெளிநாட்டு கொடியுடன் கூடிய சரக்கு கப்பல் ஒன்று வந்து கொண்டிருந்தது. தமிழகத்தின்தூத்துக்குடிநகர்நோக்கி வந்த அந்த கப்பலில் இந்திய நாட்டவர் ஒருவர் உள்பட 21 சிப்பந்திகள் இருந்தனர்.

அப்போது கப்பலுக்குள், கொள்ளையடிக்கும் நோக்கில் திடீரென கடற்கொள்ளையர்கள் புகுந்தனர். இதனை அறிந்து அதிர்ச்சி அடைந்த கப்பலில் இருந்த சிப்பந்திகள் உடனடியாக பாதுகாப்பான அறைக்குள் சென்று கதவை பூட்டிக்கொண்டனர். அதனுடன், இந்திய கடற்படையை தொடர்புகொண்டு தகவல் தெரிவித்தனர்.

கடற்கொள்ளையர்கள் கப்பலின் முக்கிய பகுதிகள் மற்றும் அறைகளை உடைத்து சேதப்படுத்தி உள்ளனர். அப்போது, இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். திரிகாந்த் கப்பலை சேர்ந்த வீரர்கள் அந்த சரக்கு கப்பலுக்குள் சென்றனர்.

அவர்கள் நிலைமையை ஆய்வு செய்தனர். சந்தேகத்திற்குரிய நபர்களை தேடினர். அவர்களை பார்த்ததும் கடற்கொள்ளையர்கள் தப்பி ஓடி விட்டனர். கப்பலில் வேறு யாரும் இல்லை என உறுதி செய்த பின்னர், கப்பல் சிப்பந்திகள் அறையை விட்டு வெளியே வந்தனர்.

அவர்களும், வீரர்களுடன் சேர்ந்து கப்பலின் நிலைமையை ஆய்வு செய்தனர். அவர்களின் பாதுகாப்புக்காக இந்திய கடற்படையின் கடல்சார் ரோந்து விமானம் ஒன்றும் வந்தது. வான்வழி கண்காணிப்பு பணியிலும் ஈடுபட்டது. கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத வகையில், அரபிக்கடல் பகுதியில் கடற்கொள்ளை அதிகரித்துள்ளது.

இந்த பகுதியில், 2023ம் ஆண்டு முதல் அதிகரித்து வரும் இதுபோன்ற 20 கடற்கொள்ளை முயற்சிகளை இந்திய கடற்படையின் போர் கப்பல்கள் முறியடித்துள்ளன.

# அதிமுகவில் இருந்து வைகை செல்வன் விலகல்: எடப்பாடி மீது கடும் குற்றச்சாட்டு



சென்னை, ஜூலை 4

சட்டசபை தேர்தல் தோல்விக்குபிறகுஅ.தி.மு.க.வை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் பலர் அக்கட்சியில் இருந்து விலகி த.வெ.க.வில் இணைந்து வருகின்றனர். இந்த நிலையில், அதிமுகவில் இருந்து முன்னாள் அமைச்சர் வைகை செல்வன் விலகியுள்ளார். பதவி விலகல் கடிதத்தை பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு அனுப்பி வைத்துள்ளார். அதில் எடப்பாடி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை கூறியுள்ளார்.

வைகை செல்வன் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

வணக்கம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர் உள்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகிக் கொள்கிறேன். ஒரு தலைவர் தானே அழிந்தால் கூட தனது கொள்கைகளும், இயக்கமும் வெற்றி பெற வேண்டும் என நினைப்பார்கள். ஆனால், இயக்கமும், கழகத் தொண்டர்களும் அழிந்தால் கூட தான் மட்டுமே நன்றாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர் நல்ல தலைவராக இருப்பதில்லை.

திமுகவோடு இணைந்து ஆட்சியமைக்க திட்டமிட்டதன் மூலம், திமுக எதிர்ப்பு நிலையில் இருந்து அதிமுக சமரச போக்கில் போனதால் தனது அடையாளத்தை இழந்து விட்டது. சரியான நேரத்தில் தவறான முடிவெடுப்பதன் காரணமாகவும், தனது வெற்றிப் பாதையில் இருந்து அதிமுக விலகிச் சென்று விட்டது. மேலும், தேர்தல் களத்தில் நான் தனித்து விடப்பட்ட நிலையிலும் கூட, கழகத்திற்காக தேர்தல் பரப்புரையாற்றினேன். ஆனால், மரணத்தை விடக் கொடியது புறக்கணிப்பு என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று..." மதியாதவரின் பின் சென்று ஒருவன் உயிர் வாழ்வதை விட, அவ்வாறு செய்யாததால் கெட்டான் என்று சொல்லப்படுதல் நன்று என்கிற வள்ளுவப் பேராசானின் வார்த்தைகளுக்கு நான் கீழ் படிகிறேன்.

மாணவப் பருவம் தொட்டு ரத்தமும், சதையுமாக இருந்து இந்த இயக்கத்தோடு பணியாற்றி தற்போது விலக வேண்டிய சூழ்நிலையை எண்ணிப் பார்க்கையில், என் மனதில் ஏற்படும் கடுமையான வலியை வார்த்தைகளால் வடிக்க முடியவில்லை. நேரம் வருகிற போது இன்னும் இதுகுறித்து பேசுகிறேன். 'புதிய இடத்தில் நடுவதற்கு புடுங்கிப் போன செடியில் இருக்கும் பழைய மண்ணைப் போல' இந்த இயக்கத்திற்காக ஆற்றிய என் பழைய நினைவுகளை என்ன செய்வது என்று எனக்கே தெரியவில்லை. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வாயு கசிவு விபத்து; ஆலையில் தேங்கி நிற்கும் 2 டன் அமோனியாவை வெளியேற்றும் பணி நாளை நடைபெறும் மாவட்ட கலெக்டர் தகவல்



திருவள்ளூர், ஜூலை 4

அமோனியா வாயு கசிவு விபத்து ஏற்பட்ட ஆலையில் இருந்து 500 மீட்டர் சுற்றளவு வரையிலான பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆலையில் தேங்கி நிற்கும் 2 டன் அமோனியாவை வெளியேற்றும் பணி நாளை நடைபெற உள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் பெரியபாளையம் அடுத்த கன்னிகைப் பேர் கிராமத்தில் புனித பீட்டர் பால் கடல் உணவு பொருள்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனத்தில் கடந்த 21ந்தேதி அமோனியா வாயு கசிந்து விபத்து ஏற்பட்டது. இதில் 74 வட மாநில தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு 2 தனியார் மற்றும் 2 அரசு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சிகிச்சை பலனின்றி 17 பேர் உயிரிழந்த நிலையில், இன்று காலை மேலும் ஒரு பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் அமோனியா வாயு கசிவு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் சில தொழிலாளர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தவர்களின் உடல்கள் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் சார்பில் பிரேத பரிசோதனை முடிந்து அவர்களது சொந்த மாநிலத்துக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப் பட்டன.

இந்த சூழலில், அமோனியா வாயு கசிவு ஏற்பட்ட ஆலையில் இருந்து 500 மீட்டர் சுற்றளவு வரையிலான பகுதி தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆலைக்கு 300 கி.மீ. சுற்றளவில் உள்ள மக்களை வெளியேற்றும் பணி இன்று தொடங்க உள்ளது.

இந்நிலையில், வாயு கசிவு ஏற்பட்ட ஆலையில் இன்று திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் கவிதா நேரில் ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;

"ஆலையில் தேங்கி நிற்கும் 2 டன் அமோனியாவை வெளியேற்றுவதற்கான ஆயத்தப் பணிகள் இன்று நடைபெற்று வருகின்றன. அமோனியாவை வெளியேற்றுவதற்கு தேவையான கருவிகளும், நிபுணர் குழுக்களும், ஆம்புலன்ஸ், தீயணைப்பு வீரர்கள் ஆகியோர் இன்று வரவழைக்கப்பட்டுள்ளனர். அமோனியாவை வெளியேற்றும் பணி நாளை காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது.

ஆலையை சுற்றி 300 மீட்டர் சுற்றளவில் இருக்கும் தொழிற்சாலைகளுக்கு நாளை விடுமுறை அளிக்க அறிவுறுத்தியுள்ளோம். இங்கு 300 மீட்டர் சுற்றளவிற்குள் குடியிருப்புகள் எதுவும் இல்லை. அதைத் தாண்டி இருக்கும் மக்கள் யாரும் பயப்பட வேண்டாம். அமோனியாவை கொண்டு செல்லும் வாகனங்களுக்காக நாளை போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட உள்ளன."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அனிதா ராதாகிருஷ்ணன் கைது; சர்வாதிகாரத்தின் உச்சம் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்





சென்னை, ஜூலை 5

முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதி பிறந்தநாளையொட்டி ஜூன் 20ல் திருச்செந்தூரில் நடந்த கூட்டத்தில் முதல்அமைச்சர் விஜய் குறித்து திமுக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பேசியிருந்தார்.

தவெக நகரச் செயலாளர் செல்வம் அளித்த புகாரில் அனிதா ராதாகிருஷ்ணன் மீது ஆத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்திருந்தனர். அனிதா ராதாகிருஷ்ணன் தாக்கல் செய்த முன்ஜாமீன் மனுவை உயர் நீதிமன்றம் இன்று காலை தள்ளுபடி செய்தது.

முன் ஜாமீன் மனு தள்ளுபடியான நிலையில் தூத்துக்குடி மாவட்டம் ஆத்தூர் பேரூராட்சி அலுவலகத்துக்கு ஆய்வுக்கு சென்ற போது போலீசாரால் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அனிதா ராதாகிருஷ்ணனை அவரது காரில் இருந்து இறக்கி போலீஸ் வாகனத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர்.

முதல்அமைச்சர் விஜயை அவதூறாகப் பேசியதாக தவெக நிர்வாகி அளித்த புகாரில் திமுக முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்ட சம்பவத்திற்கு திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டது குறித்து சென்னை அண்ணா அறிவாலயத்தில் ஆர்.எஸ். பாரதி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

ஆய்வுக்கு சென்ற சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதா? மு.க.ஸ்டாலின், உதயநிதியை அவதூறாக பேசிய ஆதவ் அர்ஜுனாவை கைது செய்வார்களா? ஒருவரை விமர்சித்து பேசியதற்காக கைது செய்ய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

கரூரில் இடைத்தேர்தல் வரவுள்ளதாக மக்கள் திமுக ஆட்சியில் அவதூறு வழக்கில் யாரும் கைது செய்யப்பட்டது இல்லை. இது சர்வாதிகாரத்தின் உச்சம். இதனை சட்டரீதியாக சந்திப்போம். அராஜகத்தை முடிவுக்கு கொண்டு வருவோம்.

கரூர் நெரிசல் குறித்து ஆதவ் அர்ஜுனா பொய்யும் புரட்டும் பேசி உள்ளார். மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் ஆதவ் அவ்வாறு பேசியுள்ளார். ஆதவ் பேச்சு குறித்து சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்போகிறோம்.

கரூரில் 41 பேர் இறந்தபோது ஓடி சென்றவர்தான் விஜய். கரூர் நெரிசல் வழக்கில் எந்த அதிகாரியை விசாரிக்க நியமித்தோமோ அவரையே இன்று தவெக அரசு நியமித்தது. தவெக ஆட்சியில் ஆக்கபூர்வமான பணிகள் எதுவும் நடைபெறவில்லை. தவெகவின் அராஜகத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அனிதா ராதாகிருஷ்ணன் கைது: உதயநிதி ஸ்டாலின் கண்டனம்



சென்னை, ஜூலை 4

திமுக எம்.எல்.ஏ.வும், முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டதற்கு, தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

முன்னாள் அமைச்சர் அண்ணன் அனிதா ராதாகிருஷ்ணனை காவல்துறை கைது செய்துள்ளதை வன்மையாக கண்டிக்கிறேன். தமிழ்நாடெங்கும் சீர்கெட்டு போயிருக்கும் சட்டம் ஒழுங்கை மீட்டெடுக்கக்காட்டாத வேகத்தை, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினரை கைது செய்வதில் காட்டியிருக்கிறது சோபா மாடல் அரசு.

அவதூறு பேசி பொய் பழிகளை அள்ளி வீசுவது மட்டும்தான் அரசியல் என்று செயல்படும் ஆளுங்கட்சியின் இந்த அராஜகப் போக்கை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பொய் வழக்காலும் கைது நடவடிக்கைகளாலும் கழகத்தை முடக்கலாம் என்று நினைக்கும் இந்த ரீல்ஸ் அரசின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம்: கார் விபத்தில் மாமியார், மருமகள் பலி





விழுப்புரம், ஜூலை 4

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பகுதியில் தடுப்பு கட்டையில் கார் மோதிய விபத்தில் சென்னையைச்சேர்ந்த மாமியார், மருமகள் பலியாகினர்.

சென்னை மயிலாப்பூர் லலிதா நகரை சேர்ந்தவர் விஸ்வநாதன் (வயது 63). இவர், தனது மனைவி விசாலாட்சி(59), தாய் லட்சுமி(91), உறவினர் பத்மநாபன் மனைவி நாகலட்சுமி(59) ஆகியோருடன் ஒரு காரில் திருச்சி நோக்கி புறப்பட்டார். காரை விஸ்வநாதன் ஓட்டினார்.

அந்த கார் நேற்று காலை 11மணியளவில்விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி பகுதியில் திருச்சிசென்னை தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தது. மேலக்கொந்தை கூட்டு ரோடு அருகே வந்தபோது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் திடீரென சாலையின் நடுவே உள்ள தடுப்புக்கட்டையில் பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்த விசாலாட்சி, லட்சுமி ஆகியோர் பரிதாபமாக உயிரிழந்தார். விஸ்வநாதன், நாகலட்சுமி ஆகியோர் படுகாயம் அடைந்தனர்.

# சட்டம்ஒழுங்கு, வளர்ச்சி திட்டங்கள் குறித்த கவர்னரின் ஆய்வு; அதிகார வரம்பை மீறிய செயல் எஸ்டிபிஐ கட்சி கண்டனம்

சென்னை, ஜூலை 5

சட்டம்ஒழுங்கு, வளர்ச்சி திட்டங்கள் குறித்த கவர்னரின் ஆய்வு என்பது அதிகார வரம்பை மீறிய செயல் என்று எஸ்டிபிஐ கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில அமைப்புப் பொதுச்செயலாளர் நஸ்ரூதீன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மதுரையில் நேற்று நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற தமிழக பொறுப்பு கவர்னர் ராஜேந்திர அர்லேகர், அதைத் தாண்டி வைகை ஆற்றை ஆய்வு செய்ததும், அரசு விருந்தினர் மாளிகையில் மதுரை மாவட்ட கலெக்டர் நிஷாந்த் கிருஷ்ணா, போலீஸ் கமிஷனர் ராஜேந்திரன் ஆகியோரை அழைத்து சட்டம்ஒழுங்கு, வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மத்திய அரசின் திட்டங்கள் குறித்து ஆய்வு என்ற பெயரில் விசாரணை நடத்தியிருப்பதும் ஏற்புடையதல்ல.

மாநிலத்தில் வளர்ச்சிப் பணிகள், காவல்துறை ஆய்வுகள் குறித்து ஆலோசிக்கவும், முடிவெடுக்கவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதுறை சார்ந்த அமைச்சர்களும், முதல்அமைச்சரும் இருக்கிறார்கள். அவர்களை முற்றிலும் ஓரங்கட்டிவிட்டு, கவர்னர் நேரடியாக அதிகாரிகளை அழைத்து ஆய்வு நடத்துவது என்பது மக்களாட்சி மாண்புகளைக் கேலிக்குரியதாக்கும் செயலாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி கவர்னருக்கு இத்தகைய நேரடி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள எந்த அதிகாரமும் இல்லை.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசுக்கு இணையாக, இணையாட்சி நடத்த முயல்வதும், மாநில நிர்வாகத்தின் அன்றாடச் செயல்பாடுகளில் மூக்கை நுழைப்பதும் நாட்டின் அரசியலமைப்புச் சட்ட வரையறைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

தமிழகத்தில் தொடர்ந்து கவர்னர்கள் தங்களின் அதிகார வரம்பை மீறி, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை முடக்கும் நோக்கில் செயல்படுவது வாடிக்கையாகிவிட்டது. கவர்னரின் இந்த அத்துமீறிய நடவடிக்கையை எஸ்.டி.பி.ஐ. கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "ஆணவம் அழிவிற்கு வழி"... அனிதா ராதாகிருஷ்ணன் கைதுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை, ஜூலை 4

திமுக எம்.எல்.ஏ.வும் முன்னாள் அமைச்சருமான அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டதை கண்டித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

முதல் அமைச்சர் விஜய்யை அவதூறாகப் பேசினார் என்று முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணனை கைது செய்துள்ளது 'Take Diversion' அரசு. தொகுதியில் ஆய்வு மேற்கொண்டு மக்கள் பணியில் ஈடுபட்டு இருந்தவரை, அவசர அவசரமாகக் கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன வந்தது?. சினிமா ஆக்ஷன் பாணியில் போலீஸ் ராஜ்ஜியம் நடத்திக் கொண்டிருக்கிறார் முதல்அமைச்சர் விஜய்.

கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்மணிஸ்ரீவைகுண்டம் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் மேல் கூறியுள்ள புகாரில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்காத 'தூயசக்தி ஆட்சி', அந்த வழக்கில் ஏன் இந்த அவசரத்தைக் காட்டவில்லை?. தமிழ்நாடு முழுவதும் நடைபெறும் கொலை, கொள்ளைகளையும் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களையும் தடுக்க வக்கில்லாமல் அடுத்த கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை இணைத்துக் கொண்டிருக்கும் இந்த அரசின் மாற்றம் இதுதானா?.

அவதூறு வழக்கில் கைது செய்வதாக இருந்தால், இன்றைய அமைச்சர்கள் பேசும் பேச்சுக்கு எல்லாம் எத்தனை பேரைக் கைது செய்வது?. வாக்களித்த மக்களுக்கு எந்த நன்மையும் செய்யாமல், குதிரைபேரத்தின் மூலமாகத் தனது நாற்காலியைத் தக்க வைத்து விமர்சிக்கும் எதிர்க்கட்சிகளைக் கைது செய்து காலம் கடத்திவிடலாம் என நினைக்கிறார் முதல்அமைச்சர் விஜய். "ஆணவம் அழிவிற்கு வழி!".

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கோத்தகிரி அருகே குட்டிகளை முதுகில் சுமந்தவாறு கரடி உலா; பொதுமக்கள் அச்சம்



நீலகிரி, ஜூலை 4

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள கன்னிகா தேவி காலனி பகுதியில் கரடிகள் நடமாட்டம் உள்ளது. ஏற்கனவே இந்த பகுதியில் வனத்துறையினர் 2 முறை கூண்டு வைத்து. அதில் சிக்கிய கரடிகளை தலைகுந்தா பகுதிக்கு கொண்டு சென்று அடர்ந்த வனப்பகுதிக்குள் விடுவித்தனர்.

இருப்பினும், கடந்த 2 ஆண்டுகளாக கரடிகள் கன்னிகா தேவி காலனி குடியிருப்பு பகுதிகள் மற்றும் நகராட்சி வளம் மீட்பு பூங்கா பகுதியில் உலா வந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் நேற்று முன்தினம் பகலில் கன்னிகா தேவி காலனி குடியிருப்பு பகுதியில் தேயிலை தோட்டத்தை ஒட்டி செல்லும் நடைபாதை வழியாக கரடி ஒன்று முதுகில் 2 குட்டிகளை சுமந்தவாறு நடந்து வந்தது.

இதனால் அங்கு தேயிலை பறித்து கொண்டிருந்த தொழிலாளர்கள், அந்த வழியாக சென்ற பொதுமக்கள் அச்சமடைந்தனர். இதையடுத்து பொதுமக்கள் சத்தம் போட்டு கரடியை விரட்ட முயற்சித்தனர். அவர்களை பார்த்த கரடி சற்று நேரம் தனது குட்டிகளுடன் நடைபாதையிலேயே அமர்ந்து கொண்டது. பின்னர் கரடி தனது குட்டிகளை மீண்டும் தனது முதுகில் சுமந்தவாறு வந்த வழியாகவே திரும்பி சென்று, அருகிலுள்ள தேயிலை தோட்டத்தில் புகுந்து மறைந்தது.

கரடி நடமாட்டத்தால் மக்கள் அச்சமடைந்து உள்ளனர். எனவே, குடியிருப்பு பகுதிகள் மற்றும் தேயிலை தோட்டங்களில் உலாவரும் கரடிகளை கூண்டு வைத்து பிடிக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தஞ்சை: காணாமல் போன பிளஸ் 2 மாணவி சடலமாக மீட்பு



சென்னை, ஜூலை 4

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே காணாமல் போன பிளஸ் 2 மாணவி, வீட்டின் அருகே உள்ள கிணற்றில் சடலமாக மீட்கப்பட்டார். கடந்த 30ம் தேதி வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மகளை காணவில்லை என போலீசில் அவரது தாய் புகார் அளித்து இருந்தார்.

இந்நிலையில் காணாமல் போன மாணவி வீட்டின் அருகே உள்ள கிணற்றில் சடலமாக கண்டெடுக்கப் பட்டுள்ளார். பிளஸ் 2 மாணவி கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்பது குறித்து பூதலூர் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

மாணவி சடலமாக கண்டெடுக்கப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அரசுப்பணிகளை ஆய்வு செய்ய கவர்னருக்கு உரிமை இல்லை அமைச்சர் நிர்மல்குமார்

சென்னை, ஜூலை 4

தமிழக பொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக விமானம் மூலம் நேற்று மதுரை சென்றார். அங்கு தனியார் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் கவர்னர் பங்கேற்றார். அப்போது மதுரையில் வைகை ஆறு உள்ளது. ஆனால் அதில் நீர் இல்லை. அதை சீரமைக்க வேண்டும். மேலும் வைகை ஆற்றை மீட்க இளைஞர்கள் முன்வரவேண்டும். அதற்கான முயற்சி யாரும் எடுக்காவிட்டால் கவர்னர் மாளிகை முயற்சி எடுக்கும் என்று பேசினார்.

அதன்பின்னர் அரசு சுற்றுலா மாளிகைக்கு வந்த கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், மதுரை மாவட்ட கலெக்டர், மாநகர போலீஸ் கமிஷனர், போலீஸ் சூப்பிரண்டு உள்ளிட்ட அதிகாரிகளுடன் திடீர் ஆலோசனைகள் மேற்கொண்டார். அப்போது வைகை ஆறு தொடர்பாகவும், சட்டம் ஒழுங்கு குறித்தும் பேசியதாக கூறப்படுகிறது. அதிகாரிகளுடன் கவர்னரின் இந்த ஆலோசனை விவாதப்பொருளாகவும் மாறி உள்ளது. கவர்னரின் இந்த நடவடிக்கைக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனங்களை தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த விவகாரம் குறித்து சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் கூறியதாவது:

தமிழகம் முழுவதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் அதிகாரத்துக்குட்பட்டு ஆய்வு செய்யலாம். எந்தவித அதிகாரமும் இல்லாமல் கவர்னர் இங்கு வந்து எந்தவொரு திட்டத்தையும் ஆய்வு செய்ய உரிமை இல்லை. அதை இந்த அரசு என்றைக்கும் அனுமதிக்காது.

எங்கையாவது தேவையில்லாமல் அரசின் நிர்வாகத்தில் கவர்னர் வந்து ஆய்வு செய்வேன் என்று தலையிட்டால் கடுமையான கண்டனம் தெரிவிக்கப்படும். கண்டிப்பாக எந்த அதிகாரியும் அரசின் அனுமதி இல்லாமல் கவர்னருக்கு ஒத்துழைப்பு கொடுக்கக்கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட அரசு இருக்கும்போது கவர்னர் தேவையில்லாமல் ஆய்வு செய்வது தேவையில்லாத குழப்பத்தை ஏற்படுத்தும். அவருக்கு அந்த அதிகாரம் கிடையாது. அரசின் நடவடிக்கைகளில் கவர்னர்தலையிட கூடாது. அரசு திட்டங்களை ஆய்வு செய்ய கவர்னரை அனுமதிக்க முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

சென்னை, ஜூலை 4

தமிழக சட்டசபை தேர்தலுக்குப்பின் மாநில அரசியல் களம் பல்வேறு அதிரடி மாற்றங்களை சந்தித்து வருகிறது. தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த நிலையில் காங்கிரஸ் உள்பட பிற கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது.



அதேவேளை, தவெக அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பின்போது தவெகவுக்கு ஆதரவாக அதிமுக எம்.எல்.ஏ.க்கள் 25 பேர் வாக்களித்தனர். இதனால் அதிமுகவில் குழப்பம் ஏற்பட்டது. மேலும், அதிமுகவின் முக்கிய நிர்வாகிகள் பலரும் அக்கட்சியில் இருந்து விலகி தவெகவில் இணைந்த வண்ணம் உள்ளனர்.

அதிமுக முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், கட்சி நிர்வாகிகள் பலரும் தவெகவில் இணைந்து வருகின்றனர். குறிப்பாக, நேற்று அதிமுக முன்னாள் அமைச்சர்கள் சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர் நேற்று தவெகவில் இணைந்தனர். இந்த நிகழ்வு அதிமுகவுக்கு பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், அதிமுக மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்று வருகிறது. சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த ஆலோசனைகூட்டம் நடைபெற்று வருகிறது. இந்த கூட்டத்தில் அதிமுகவின் வளர்ச்சி, அடுத்தகட்ட செயல்பாடு, கள நிலவரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்று வருகிறது.

# நெல்லை இரட்டை கொலை: தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு பாதுகாப்பே இல்லாமல் ஆகிவிட்டது கனிமொழி

சென்னை, ஜூலை 4

நெல்லையில் முன்பகை காரணமாக பைக் மீது காரை மோதவிட்டு மகனை (5 வயது) படுகொலை செய்த கும்பல், தந்தையின் தலையை அரிவாளால் வெட்டி துண்டித்து நடு ரோட்டில் வைத்துவிட்டு சென்ற கொடூர சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு பாதுகாப்பு என்ற ஒன்றே இல்லாமல் ஆகிவிட்டது என்று திமுக எம்.பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் அருகே தந்தையும் அவரது 5 வயது மகனும் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கிறது.

சட்டம் ஒழுங்கு முழுவதும் சீர்கெட்டுவிட்ட நிலையில், தமிழ்நாட்டில் பொது மக்களுக்கு பாதுகாப்பு என்ற ஒன்றே இல்லாமல் ஆகிவிட்டது. தவெக அரசு, முன்விரோதம் காரணமாகத் தொடரும் இப்பிரச்சனையில் மெத்தனமாக செயல்படாமல் குற்றவாளிகளை விரைந்து கைது செய்து, அப்பகுதியில் அமைதி திரும்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பொறுப்பு கவர்னருக்கு 'பொறுப்பு' வேண்டாமா? அமைச்சர் வன்னி அரசு கேள்வி



சென்னை, ஜூலை 4

சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

மதுரையில் நிகழ்வு ஒன்றில் பேசிய தமிழ்நாட்டின் பொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், "மதுரை வைகை ஆற்றைப் பார்த்தேன். ஆறு உள்ளது, நீர் எங்கே? துப்பாக்கி எடுத்து போருக்குச் செல்வது மட்டுமல்ல, நதிகளை மீட்பதும் தேசப்பற்றுதான். வைகையை மீட்க இளைஞர்கள் முன்வர வேண்டும். வைகை ஆற்றை யாரும் சீரமைக்காவிட்டால், கவர்னர் மாளிகையே களமிறங்கும்" என்று பேசியுள்ளார்.

அதனை தொடர்ந்து மதுரை மாவட்ட கலெக்டர், காவல் துறை ஆணையர், மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் மாவட்ட அதிகாரிகளுடன் ஆய்வு கூட்டத்தையும் நடத்தியுள்ளார் பொறுப்பு கவர்னர் அர்லேகர். கேரளாவின் கவர்னராக உள்ள அர்லேகர், கடந்த மார்ச் 12ம் தேதி தமிழ்நாட்டின் பொறுப்பு கவர்னராக பதவியேற்றார். பொறுப்பு கவர்னருக்கு பொறுப்பு இருக்க வேண்டாமா என்று தமிழ்நாட்டு மக்கள் கேள்வி எழுப்பும்படி அவரது செயல்பாடுகள் அமைந்துள்ளன.

மும்மொழி கொள்கை எனும் பெயரில் இந்தி திணிப்பு, தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்ட சமூக மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் குலக்கல்வியான சனாதன கருத்தியலை கொண்ட புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு ஏற்றால்தான், ஒருங்கிணைந்த கல்வி திட்டத்தின் கீழ் நிலுவையில் உள்ள ரூ.3,284 கோடி நிதியை வழங்குவோம் என்று மத்திய அரசு சொல்லி வருகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக, கூட்டாட்சி தத்துவத்தை ஒழிக்கும் வேலையில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது. அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்கும் பொறுப்பு கொண்ட பொறுப்பு கவர்னர் இது குறித்து வாய் திறப்பாரா? தமிழ்நாட்டின் நீர் ஆதாரமான காவிரி ஆற்றை தடுத்து நிறுத்தி, எமது உரிமையை பறிக்கும் வகையில் மேகதாதுவில் அணை கட்டுவோம் என்று கர்நாடக அரசு சொல்லி வருகிறது.

அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராகவும், சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புகளுக்கு எதிராகவும் செயல்பட்டு வரும் கர்நாடக அரசுக்கு, மத்திய அரசு மறைமுகமாக தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. தமிழ்நாடு அரசின் இசைவு இல்லாமல், கடும் எதிர்ப்பை மீறி மேகதாது அணை திட்ட அறிக்கையை தயாரிக்க கர்நாடகாவுக்கு மத்திய அரசு அனுமதி அளித்தது. தமிழ்நாட்டை பாலைவனமாக்கும் இத்திட்டத்தை எதிர்த்து பொறுப்பு கவர்னர் வாய் திறப்பாரா?

தமிழ்நாட்டின் வாழ்வாதார கோரிக்கைகள் குறித்து எதுவும் பேசாத கவர்னர் அர்லேகர், அவருக்கு முன்பு இருந்த கவர்னர் ஆர்.என். ரவி போலவே தமிழர்களுக்கு தொடர்பில்லாத, தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான கருத்துகளை கூறி வருகிறார்.

கடந்த ஜூலை 1ம் தேதி தான் டெல்லியில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷாவை கவர்னர் அர்லேகர் சந்தித்தார். அப்போது தமிழ்நாட்டின் நலன்கள் குறித்து உள்துறை மந்திரிக்கு ஏதேனும் கோரிக்கை வைத்தாரா? அல்லது அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமாக செயல்பட வேண்டும் என 'ஆலோசனை' பெற்று வந்தாரா என்று கேள்வி எழுகிறது.

2014ல் மத்திய பாஜக ஆட்சி அமைந்ததும், தூய்மை கங்கை திட்டத்தை கொண்டு வந்தனர். நீர்வளத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 2014 முதல் 2026 வரை செலவிடப்பட்ட மொத்த தொகை 26,824.86 கோடி ரூபாயாகும். 26 ஆயிரம் கோடியை கொட்டிய பின்பும் கங்கை ஆற்றின் நிலை என்ன? மனித பிணங்களும், ஆலை கழிவுகளும் தானே அதன் அடையாளமாக இன்றும் உள்ளது. இது குறித்து வாய் திறப்பாரா பொறுப்பு கவர்னர்?

காவிரி உரிமையை பாதுகாப்பது, வைகையை மீட்பது, தாமிரபரணியை போற்றுவது ஆகிய கடமைகளை தமிழ்நாடு அரசு பார்த்துக்கொள்ளும். எமது முதல்வர் விஜய் அதற்கான திட்டங்களை உத்திகளை மேற்கொள்வார். கவர்னர் முதல்வருக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை சொல்லலாம்.

அதை விடுத்து, அதிகாரிகளை வரவழைத்து ஆய்வுக் கூட்ட\ங்களை நடத்த முயற்சிப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசை அவமதிப்பது மட்டுமல்ல; ஜனநாயகத்தையே அவமதிக்கும் போக்காகும்.

தமிழ் வளர்த்த மதுரையில் 'வசுதைவ குடும்பகம்' என்று தமிழர்களுக்கு பாடம் எடுத்துள்ளார் பொறுப்பு கவர்னர் அர்லேகர். புறநானூறு சொல்லும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என எல்லோரையும் நேசிக்கும் தமிழர்களுக்கு தேசபக்தி குறித்து பாடம் எடுக்க தேவையில்லை. தமிழ்நாட்டில் புதிய அரசு அமைந்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆளுமையுள்ள புதிய முதல்வர் ஜோசப் விஜய் தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாத்து வருகிறார். தமிழ்நாட்டின் இறையாண்மைக்குள் நிர்வாகத்துக்குள் கவர்னர் தலையிடுவதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

# நெல்லையில் பழிக்குப்பழியாக பயங்கரம்: பைக் மீது காரை மோத விட்டு தந்தைமகன் படுகொலை

திருநெல்வேலி, ஜூலை 4

திருநெல்வேலியில் பைக் மீது காரை மோதவிட்டு மகனை படுகொலை செய்த கும்பல், தந்தையின் தலையை அரிவாளால் வெட்டி துண்டித்து நடு ரோட்டில் வீசிவிட்டு சென்ற கொடூர சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம், கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள மூலச்சி கிராமத்தைச் சேர்ந்த சித்திரகுப்தன் மகன் காளிமுத்து (வயது 40), விவசாயி. இவருக்கு திருமணமாகி மனைவியும், சின்னத்துரை(15), ஜெயராஜ்(5) ஆகிய 2 மகன்களும் இருந்தனர். காளிமுத்து தனது 2 மகன்களையும் தனது பைக்கில் ஏற்றிக் கொண்டு, ரெட்டியார்புரத்தில் உள்ள ஒரு தோட்டத்து வேலைக்காகச் சென்று விட்டு நேற்று மாலை 3 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவரது பின்னால் 3 பைக்குகள் மற்றும் ஒரு காரில் 9 பேர் கொண்ட கும்பல் பின்தொடர்ந்து வந்தனர்.

இதனை காளிமுத்து அறியவில்லை. அவர்கள் மாதுடையார்குளம் அருகே வந்த போது, பின் தொடர்ந்து வந்த மர்ம கும்பல், தங்களது காரால் காளிமுத்துவின் பைக்மீது வேண்டுமென்றே பலமாக மோதினர். இதில் தூக்கி வீசப்பட்டதில் 5 வயது சிறுவன் ஜெயராஜ் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தான்.

விபத்து ஏற்படுத்தியதோடு நில்லாமல், காரில் இருந்தும், 3 பைக்குகளிலும் வந்த கும்பல் அரிவாள்களுடன் திபுதிபுவென இறங்கியது. கீழே படுகாயங்களுடன் கிடந்த காளிமுத்துவைச் சூழ்ந்த அக்கும்பல், அவரது 15 வயது மகன் சின்னத்துரையின் கண் முன்னே காளிமுத்துவின் தலையை கொடூரமாகத் துண்டித்துக் கொலை செய்தது.

தன் தந்தை மற்றும் தம்பி கொடூரமாகக் கொல்லப்படுவதைக் கண்டு சின்னத்துரை கதறி அழுதான். ஆத்திரம் அடங்காத அந்த கும்பல், சின்னத்துரையின் வலது காலிலும் அரிவாளால் வெட்டி, சரமாரியாக தாக்கியது. இதில் அவனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது.

விபத்தில் கொலையாளிகளின் கார் சேதமடைந்ததால், காளிமுத்துவின் துண்டிக்கப்பட்ட தலையை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் பைக்குகளில் தப்பினர். சுமார் 5 கிலோ மீட்டர் தூரம் பயணித்த அந்த கும்பல், கல்லிடைக்குறிச்சி அருகே உள்ள கரம்பை பகுதியில் மாநில நெடுஞ்சாலையின் நடு ரோட்டில் காளிமுத்துவின் தலையை வீசி விட்டு தப்பிச் சென்றனர்.

இதுகுறித்து தகவலறிந்த நெல்லை சரக டி.ஐ.ஜி. திருநாவுக்கரசு மற்றும் மாவட்ட எஸ்.பி. விஸ்வேஷ் பா. சாஸ்திரி ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். படுகாயமடைந்த சிறுவன் சின்னத்துரை நெல்லை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

போலீசாரின் முதற்கட்ட விசாரணையில், இந்த கொலைக்கு இரு தரப்பினரிடையே நீடித்து வந்த பல ஆண்டுகாலப் பகைதான் காரணம் என தெரிய வந்துள்ளது. அதாவது கடந்த 2012 ம் ஆண்டு, குடிநீர் குழாயில் தண்ணீர் பிடிப்பது தொடர்பாக இதே மூலச்சி கிராமத்



தைச் சேர்ந்த பெருமாள் பாண்டியன் என்பவரை காளிமுத்து தரப்பினர் கொடூரமாகக் கொலை செய்து, அவரது தலையை துண்டித்து கரம்பை பகுதியில் வீசியிருந்தனர்.

அதற்கு பழிக்குப்பழியாகவே தற்போது பெருமாள் பாண்டியன் தரப்பினர் இந்த இரட்டைக் கொலையை அரங்கேற்றியுள்ளனர். கடந்த 2021ம் ஆண்டு போலீசார் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியும் பகை ஓயாததால் காளிமுத்து வெளியூரில் வசித்து வந்தார். அவர் இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சொந்த ஊருக்குத் திரும்பியுள்ளார். இதைக் கண்காணித்த எதிர்த்தரப்பு, சமயம் பார்த்து இந்த கொடூரத்தை நிகழ்த்தியுள்ளது.

காளிமுத்துவின் தலையைத் துண்டித்த கொடூர கும்பல், மூலச்சி கிராமத்திற்குள் புகுந்து அங்கிருந்த பெண்களிடம் துண்டிக்கப்பட்ட தலையைக் காட்டி, "பெருமாள் பாண்டியன் இறந்தது போல உங்கள் ஆளையும் கொலை செய்து விட்டோம், பாருங்கள்" எனக் கூச்சலிட்டவாறே ஊர்வலமாகச் சென்றுள்ளனர். இதைக் கண்டு பெண்கள் அலறியடித்து ஓடினர். அதன் பிறகே கொலையாளிகள் தலையைக் கரம்பை பகுதியில் வீசிச் சென்றுள்ளனர். தப்பியோடிய அந்த கும்பலைப் பிடிக்க 6 தனிப் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த இரட்டைக் கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 8 மாதங்களில் நெல்லையை உலுக்கிய இரட்டைக்கொலை சம்பவங்கள் பின்வருமாறு:

கடந்த 2025ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நெல்லை தச்சநல்லூர் கரையிருப்பு பகுதியை சேர்ந்த தங்ககணபதி (வயது 48) மற்றும் அதே பகுதியை சேர்ந்த அவரின் உறவினர் மூக்கன்(50) ஆகியோர் அரிவாளால் வெட்டி கொலை செய்யப்பட்டனர்.

இந்த ஆண்டு (2026) மார்ச் மாதம் 2ந்தேதி நாங்குநேரி பெரும்பத்து பகுதியில் போதை கும்பல் நடத்திய வெறியாட்டத்தில், பெரும்பத்து இந்திராநகரை சேர்ந்த ஜாண் (43), ஒடிசாவை சேர்ந்த திரினாத் கட்டா (50) ஆகியோர் கொலை செய்யப்பட்டனர்.

நேற்று (2.7.2026) வீரவநல்லூர் காவல் நிலையத்திற்கு உட்பட்ட வல்லத்து நம்பிகுளத்தில், பைக்கில் சென்ற கல்லிடைக்குறிச்சி மூலச்சி கிராமத்தை சேர்ந்த காளிமுத்து(40), அவரின் 5 வயது மகன் ஜெயராஜ் ஆகியோர் காரை மோதவிட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர். இதில் காளிமுத்துவின் தலையை அந்த மர்ம கும்பல் வெட்டி நடு ரோட்டில் வீசிவிட்டு சென்றது.

# ஆமா.. குதிரை பேரம்னு சொல்றாங்களே, அப்படின்னா என்ன?

சென்னை, ஜூலை 4

தமிழக அரசியலில் 'குதிரை பேரம்' என்ற வார்த்தை தற்போது அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்படி என்றால் என்ன? என்பதை பற்றி பார்க்கப்போகிறோம்.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17வது சட்டசபை தேர்தலுக்கு முன்பு 'தற்குறி கூட்டம்' என்ற வார்த்தையை அடிக்கடி கேட்டிருப்போம். ஆனால், தேர்தலுக்கு பிறகு 'குதிரை பேரம்' என்ற வார்த்தையை தினந்தோறும் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

சட்டசபை தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மைக்கு தேவையான 118 இடங்கள் கிடைக்காததால், அதிக இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க. ஆட்சி அமைத்துள்ளது. அந்தக் கட்சி ஆட்சி அமைக்க காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவுக்கரம் நீட்டியுள்ளன.

அதேநேரத்தில், சட்டசபையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, அ.தி.மு.க.வை சேர்ந்த 25 பேரும், அ.ம.மு.க. சேர்ந்த ஒருவரும் த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால், ஆவேசம் அடைந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் ஆகியோர் த.வெ.க. அரசு குதிரை பேரத்தில் ஈடுபட்டு, தங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்களை இழுப்பதாக குற்றம்சாட்டினார்கள்.

இப்போது, த.வெ.க. அரசை கலைக்க, எதிர்க்கட்சியான தி.மு.க.வே அக்கட்சி எம்.எல்.ஏ.க்களிடம் ரூ.35 கோடி



தருவதாக குதிரை பேரத்தில் ஈடுபட்ட தகவல் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பான விசாரணை ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, குதிரை பேரம் என்றால் என்ன? என்பதை பற்றி தொடர்ந்து பார்ப்போம்.

அதாவது, அரசியலில் ஒரு கட்சி ஆட்சியமைக்கத் தேவையான பெரும்பான்மையை நிரூபிக்கவோ அல்லது ஆட்சியை கவிழ்க்கவோ, பிற கட்சிகளைச் சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அல்லது எம்.பி.க்களை பண பலத்தாலோ அல்லது பதவி ஆசையாலோ விலைக்கு வாங்கும் முறையே 'குதிரை பேரம்' என்று அழைக்கப்படுகிறது.

குதிரை பேரம் என்ற சொல் உருவானதற்கான பின்னணியாக, முந்தைய காலத்தில் குதிரை வியாபாரிகள் தங்களது குதிரைகளை விற்கவும், வாங்கவும் வாடிக்கையாளர்களுடன் சாதுர்ய பேச்சு வார்த்தையிலும், தந்திரங்களிலும் ஈடுபடுவார்களாம். இதில் இருந்து நாளடைவில் இப்பெயர் உருவானது என்று சொல்லப்படுகிறது.

ஆனால், குதிரை பேரம் என்பது ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையைச் சிதைக்கும் ஒரு அரசியல் ஊழலாக பார்க்கப்படுகிறது.

# கோவில்களில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து புகார் அளிக்கலாம் அமைச்சர் ரமேஷ் அறிவிப்பு

சென்னை, ஜூலை 4

கோவில்களில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து எனது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு ஆதாரங்களுடன் புகார் அளிக்கலாம் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

அன்பிற்குரிய பொது மக்கள் அனைவருக்கும் ஒரு முக்கிய அறிவிப்பு! தமிழ்நாடு முழுவதும் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களில் நடைபெறும் முறைகேடுகள்,

சட்டவிரோதமாக பணம் பெறுதல், திருக்கோவில்களின் திருப்பணிகள் மற்றும் திருக்கோவில்களின் வேலைவாய்ப்பு போன்றவற்றிற்கு லஞ்சம் பெறுதல் போன்ற குற்றங்களை பற்றி கீழே வழங்கப்பட்டுள்ள எனது தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு தகுந்த விளக்கம் மற்றும் ஆதாரங்களுடன் புகார்களை அளியுங்கள்.



நானும் எனது அலுவலகமும் நேரடியாக இந்த புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வழிவகைகளை செய்வோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். E Mail : minister_hrce@tn.gov.in இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பச்சை தேயிலைக்கு உரிய விலை நிர்ணயிக்கப்படுமா? விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஊட்டி, ஜூலை 4

மலைப்பிரதேசமான நீலகிரி மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியிலும், மக்களின் வாழ்வாதாரத்திலும் தேயிலை விவசாயம் முக்கிய பங்கு வகிக்கிறது. 1830ம் ஆண்டு காலகட்டத்தில் சோதனை முறையில் ஆங்கிலேயர்களால் தேயிலை நடவு செய்யப்பட்டது. ஆண்டு முழுவதும் நிலவும் மிதமான குளிர் மற்றும் பரவலான மழைப்பொழிவு தேயிலைக்கு ஏற்றதாக உள்ளது.

நீலகிரியில் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறு, குறு தேயிலை விவசாயிகள் உள்ள நிலையில், கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக பச்சை தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்காததால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் தேயிலை விவசாயத்துக்கு பதிலாக மாற்றுப் பயிர்களை பயிரிடும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

பச்சை தேயிலைக்கு நியாயமான விலை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால், தீர்வு ஏற்படவில்லை. இந்த நிலையில் பச்சை தேயிலை கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.15.50 வரை மட்டுமே கிடைப்பதால் தோட்டங்களில் பராமரிப்பு உள்பட பல்வேறு செலவினங்களைஈடுசெய்யமுடியாமல்விவசாயிகள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் கிலோவுக்கு ரூ.35 வரை விலை நிர்ணயம் செய்து வழங்கினால் மட்டுமே தேயிலை விவசாயிகளுக்கு வருவாய் ஈட்ட முடியும். இதனால் தமிழக அரசு நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்பார்த்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.15 வரை மட்டுமே வழங்கப்படுகிறது. ஒரு மூட்டை உரம் ரூ.2,500க்கு மேல் விற்கப்படுகிறது. இதுதவிர தொழிலாளர்கள் சம்பளம் உள்ளிட்ட செலவினங்களை கணக்கிடும்போது நஷ்டத்தை சந்திக்க வேண்டிய நிலை தொடர்கிறது. இதனால் படிப்படியாக தேயிலை விவசாயத்துக்கு பதிலாக மாற்றுப் பயிர்களை பயிரிடும் முடிவுக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே, நீலகிரி விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு பச்சை தேயிலைக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
04.07.2026

# பலாப்பழ சீசன் முடியும் வரை காட்டு யானைகள் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்பு வனத்துறை தகவல்



நீலகிரி, ஜூலை 4

நீலகிரி மாவட்டத்தில் அடர்ந்த வனப்பகுதி, தேயிலை தோட்டங்கள் உள்ளது. இதனால் வன விலங்குகளின் வாழ்விடமாக விளங்குகிறது. நீலகிரியில் தற்போது பலாப்பழ சீசன் என்பதால், கூடலூர், பந்தலூர் தாலுகா பகுதி வனப்பகுதியில் உள்ள காட்டு யானைகள் ஊருக்குள் அதிக அளவு வந்து முகாமிட்டு வருகின்றன. மேலும் விளைநிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள மரங்களில் விளைந்துள்ள பலாப்பழங்களை தேடி காட்டு யானைகள் வருகின்றன.

அவ்வாறு வரும் யானைகள் பலாப்பழங்களை ருசித்து சாப்பிட்டு விட்டு மீண்டும் வனப்பகுதிக்குள் செல்வதில்லை. தொடர்ந்து ஊருக்குள் உலா வந்த வண்ணம் உள்ளது. மேலும் இரவு, பகல் என எந்த வேளையிலும் பலா மரங்களை சுற்றி வந்தவாறு இருக்கிறது. கூடலூரில் இருந்து ஓவேலி செல்லும் சாலையில் கெவிப்பாரா ராக்லேண்ட் தெரு எதிரே தனியார் தோட்டத்துக்கு நேற்று மாலை காட்டு யானை வந்தது.

பின்னர் அப்பகுதியில் உள்ள மரத்தில் முன்னங்கால்களை மரத்தில் தூக்கி வைத்தவாறு யானை துதிக்கையால் பலாப்பழங்களை பறிக்க முயன்றது. முக்கிய சாலையோரம் என்பதால் அந்த வழியாக சென்ற வாகன ஓட்டிகள், பொதுமக்கள் பகலில் காட்டு யானை பழங்களை பறிக்க முயற்சி செய்வதை பார்த்தனர். இதனால் மக்கள் கூட்டம் அதிகரித்தது.

இதுகுறித்து வனத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் வனத்துறையினர் விரைந்து வந்து காட்டு யானையை விரட்டும் பணியில் ஈடுபட்டனர். இதனால் தனியார் மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்துக்குள் காட்டு யானை நுழைய முயன்றது. இதைக்கண்ட மாணவிகள் கூச்சலிட்டனர். இதனால் யானை கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போன கதை போல், அங்கிருந்து கோக்கால் மலையடிவாரத்துக்கு சென்றது. அதன் பின்னரே பொதுமக்கள், மாணவிகள் நிம்மதி அடைந்தனர்.

இருப்பினும், பலாப்பழங்களை தேடி காட்டு யானை மீண்டும் அப்பகுதிக்கு வரக்கூடும் என பொதுமக்கள் வனத்துறையினரிடம் தெரிவித்தனர். அப்போது தொடர்ந்து கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தனர். மேலும் பலாப்பழ சீசன் முடியும் வரை காட்டு யானைகள் ஊருக்குள் அதிகமாக வர வாய்ப்புள்ளது. இதனால்பொதுமக்கள்மிகுந்தவிழிப்புடன் இருக்க வேண்டும். இரவில் தனியாக வெளியே வர வேண்டாம் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

# மகேந்திரகிரியில் அதிக எடை ராக்கெட்டுக்கான என்ஜின் சோதனை வெற்றி



திருநெல்வேலி, ஜூலை 4

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மகேந்திரகிரியில் அதிக எடை ராக்கெட்டுக்கான என்ஜின் சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு பகுதியில் உள்ள மகேந்திரகிரி இஸ்ரோ மையத்தில் அதிக எடை கொண்ட ராக்கெட்டுகளுக்கான செமி கிரையோஜினிக் என்ஜின் தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரவ ஆக்சிஜன் மற்றும் இஸ்ரோஜின் எரிபொருளில் இயங்கும் இந்த என்ஜினின் இக்னிஷன் சோதனை ஏற்கனவே இரண்டு முறை நடத்தப்பட்ட நிலையில், தற்போது 3வது முறையாக 5 வினாடிகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டு ள்ளது. அடுத்த கட்டமாக சோதனை நேரத்தை சிறிது சிறிதாக அதிகரித்து பல்வேறு கட்ட சோதனைகளை நடத்த இஸ்ரோ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: தாயின் 2வது கணவர் போக்சோவில் கைது

தஞ்சாவூர், ஜூலை 4

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 17 வயது பள்ளி மாணவி. இவர் கும்பகோணத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்து வருகிறார். இந்த மாணவியின் தாயார் தனது கணவரை கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து வேறு ஒருவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார்.

மாணவிக்கு தாயின் 2வது கணவர் தொடர்ந்து பாலியல் தொல்லை கொடுத்து வந்தார். மேலும் மாணவியை ஆபாசமாக வீடியோ எடுத்து மிரட்டி வந்துள்ளார். இந்த நிலையில் தாயின் 2வது கணவர் வேலைக்காக வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார். ஆனாலும் தொடர்ந்து அவர் மாணவியை மிரட்டி வந்துள்ளார். இதுகுறித்து மாணவி தனது தாயாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் விடுமுறையில் வெளிநாட்டில் இருந்து சொந்த ஊருக்கு வந்த அவர் மீது மாணவியின் தாய் கும்பகோணம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து மாணவியின் தாயின் 2வது கணவரை கைது செய்தனர்.

# திருப்பூர்: வேன் கவிழ்ந்த விபத்தில் பள்ளி மாணவி பலி

திருப்பூர், ஜூலை 4

திருப்பூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் வேன் தலைகீழாக கவிழ்ந்த விபத்தில் பள்ளி மாணவி பலியானாள்.

திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் பகுதியை சேர்ந்த தங்கபாண்டியன் மகள் நந்திதா (வயது11), அங்குள்ள அரசு உதவிபெறும் பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வந்தாள். நேற்று காலை பாலசுப்பிரமணியம் என்பவர் ஓட்டிய பள்ளி வேனில் சக மாணவிகளுடன் நந்திதா சென்றாள்.

மேட்டுப்பாளையம் அருகே வேன் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பள்ளத்தில் தலைகீழாக கவிழ்ந்தது. இதில் வேனுக்குள் சிக்கிய 5 மாணவிகளை பொது மக்கள் மீட்டனர்.

மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் நந்திதா பரிதாபமாக உயிரிழந்தாள். படுகாயமடைந்த மற்ற 4 சிறுமிகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# இன்றைய ராசி பலன்கள் (04.07.2026)

**மேஷம்:** இன்று திட்டமிட்ட காரியங்களில் கூடுதல் கவனம் (FOCUS) தேவைப்படும் நாளாக இருக்கும். புதிய முதலீடுகள் அல்லது கடன் வாங்கும் முன் ஆலோசித்து முடிவெடுப்பது நல்லது. நண்பர்கள் மற்றும் வாழ்க்கைத்துணையின் ஆதரவு மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம்:** முடிவெடுக்கும் திறமையால் பல சிக்கல்கள் தீரும். தொழில் மற்றும் வியாபாரத்தில் நிலுவையில் இருந்த வேலைகள் வெற்றிகரமாக முடியும். இன்று சற்று அலைச்சல்களும் வேலைப்பளுவும் இருந்தாலும், மாலை நேரத்தில் குடும்பத்துடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்புண்டு.

**மிதுனம்:** தேவையில்லாத வீண் வாக்குவாதங்களைத் தவிர்த்து, அமைதியாக இருப்பது நல்லது. அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனையின்றி புதிய நிதி முதலீடுகளைச் செய்ய வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கடகம்:** பொருளாதார ரீதியாக சாதகமான நாள். எதிர்பாராத பணவரவு மற்றும் நல்ல செய்திகள் வந்து சேரும். உங்கள் திறமைகளை வெளிப்படுத்திப் பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

**சிம்மம்:** தன்னம்பிக்கையும் உற்சாகமும் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். புதிய முயற்சிகள் மற்றும் தொழில் சார்ந்த திட்டங்களுக்குச் சாதகமான நாளாக அமையும்.

**கன்னி:** வியாபாரம் மற்றும் உத்தியோகத்தில் நிலுவையில் இருந்த பழைய பாக்கிகள் வசூலாகும். உங்கள் கடின உழைப்பிற்கு ஏற்ற லாபமும், மேலதிகாரிகளின் பாராட்டுகளும் வந்து சேரும்.

**துலாம்:** கூடுதல் பொறுப்புகள் வந்து சேரும் நாள். எதையும் திட்டமிட்டுச் செயல்படுத்துவது நல்லது. மாணவர்களுக்குக் கல்வியில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் மற்றும் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**விருச்சிகம்:** பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் இணைவார்கள். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த சில குடும்பப் பிரச்சினைகளுக்குநல்லதீர்வுகிடைக்கும்.

**தனுசு:** குடும்பத்தில் மகிழ்ச்சியான தருணங்கள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் புதிய அனுபவங்களும் லாபமும் உண்டாகும். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு அனுகூலமான சூழல் நிலவும்.

**மகரம்:** சகோதர வழியில் தேவையான உதவிகள் கிடைக்கும். புதிய ஆடை, ஆபரணங்கள் சேர்க்கைக்கான யோகம் உண்டு. அலுவலகத்தில் உங்கள் வேலைகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்:** உத்தியோகத்தில் இருந்த தடைகள் நீங்கி பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது. வரவுக்கு ஏற்ற செலவுகளும் வரலாம் என்பதால், சிக்கனம் தேவை.

**மீனம்:** காரியங்களில் சிறு தடைகள் வரக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்த்து, இறை வழிபாடுகளில் கவனம் செலுத்துவது மன அமைதியைத் தரும்.

# சென்னையில் இருந்து ஊட்டி வந்த ஆம்னி பஸ்சில் மருத்துவக்கல்லூரி மாணவிக்கு பாலியல் தொல்லை

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவக் கல்லூரியில் நீலகிரியை சேர்ந்தவர்களை விட, தமிழகத்தின் பிற மாவட்டங் கள் மற்றும் வெளிமாநில மாணவ மாணவிகள் அதிகம் பேர் படித்து வருகின்றனர். இங்கு படிக்கும் சென்னையை சேர்ந்த மாணவி ஒருவர் விடுமுறைக்காக சொந்த ஊருக்கு சென்றிருந்தார்.

சென்னையில் இருந்து நேற்று முன்தினம் இரவு ஆம்னி பஸ்சில் ஊட்டிக்கு புறப்பட்டார். நேற்று அதிகாலை நீலகிரி மாவட்டத்திற்குள் ஊட்டி நோக்கி பஸ் வந்து கொண்டிருந்தது. அப்போது மேல் படுக்கையில் இருந்த மாணவிக்கு ஒருவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த மாணவி சத்தம் போட்டார்.

உடனே மற்ற பயணிகள் எழுந்து பார்த்த போது, மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர் யார் என்று தெரியவில்லை. ஆனால், அந்த நபர் வெள்ளை நிற ஆடை அணிந்து இருந்தார் என்று மாணவி அடையாளம் கூறினார். இதுகுறித்து போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து நீலகிரி சிங்கப்பெண் அதிரடிப்படை போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சரோனியா மற்றும் போலீசார் வீனா, சவிதா ஆகியோர் விரைந்து வந்து பஸ்சில் இருந்தவர் களிடம் விசாரணை நடத்தினர்.

இதில் ஆம்னி பஸ்சில் மாற்று டிரைவராக வந்த மதுரையை சேர்ந்த வெள்ளை நிற ஆடை அணிந்திருந்த கார்த்திகேயன் (வயது 40) என்பவர் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்தது தெரியவந்தது. பின்னர் அவரை சிங்கப்பெண் அதிரடிப்படை போலீசார் பிடித்து, ஊட்டி மத்திய போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதன் பேரில் வழக்குப்பதிவு செய்த போலீசார் டிரைவர் கார்த்திகேயனை கைது செய்தனர். கைதான கார்த்திகேயனுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 3வது திருமணம்... 61 வயதில் மீண்டும் மாப்பிள்ளையாகும் அமீர் கான்



திருமணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அமீர் கான், "ஜூலை 5ஆம் தேதி நான் திருமணம் செய்துகொள்ள இருக்கிறேன். எங்கள் இல்லத்திலேயே திருமணம் நடைபெறும். நெருங்கிய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மட்டும் இதில் கலந்துகொள்வார்கள். எங்களுடைய திருமணத்திற்கு உங்களுடைய அனைவரின் ஆசிர்வாதமும் வேண்டும். உங்கள் ஆசியுடன் என்றும் மகிழ்ச்சியுடன் இருக்க விரும்புகிறோம்" என்று தெரிவித்தார். அப்போது அவரது மகன் ஜுனைத் கானும் உடனிருந்தார்.

கவுரி ஸ்ப்ராட், பெங்களூருவைச் சேர்ந்தவர். லண்டனில் பேஷன் மற்றும் ஸ்டைலிங் படிப்பை முடித்துள்ள அவர், தற்போது மும்பையில் சலூன் ஒன்றை நடத்தி வருவதுடன், அமீர் கானின் தயாரிப்பு நிறுவனத்திலும் பணியாற்றி வருகிறார். அவருக்கு ஏழு வயதில் ஒரு மகன் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'என் அம்மா நாஜிக்களிடம் இருந்து தப்பியவர்; அவர்தான் ஓ.ஜி. ஆல்பா' ஆலியா பட்டின் தாய் வெளியிட்ட பதிவு



பாலிவுட் திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவரான ஆலியா பட் தற்போது இயக்குனர் ஷிவ் ரவேல் இயக்கத்தில் உருவாகியுள்ள 'ஆல்பா' திரைப்படத்தில் நடித்துள்ளார். பிரபல தயாரிப்பு நிறுவனமான யாஷ் ராஜ் பலிம்ஸ் இந்த படத்தை மிகப்பெரிய பொருட்செலவில் தயாரித்துள்ளது.

இதுவரை ஆண் கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு 'ஸ்பை யுனிவர்ஸ்' படங்களை உருவாக்கி வந்த யாஷ் ராஜ் நிறுவனம், முதல் முறையாக பெண் கதாபாத்திரத்தை மையமாக வைத்து 'ஆல்பா' திரைப்படத்தை உருவாக்கியுள்ளது. இந்த படத்தில் பாபி தியோல், அனில் கபூர் மற்றும் ஷர்வரி வாக் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்த நிலையில் ஆலியா பட்டின் தாயாரும், நடிகையுமான சோனி ரஸ்தான், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சோனி ரஸ்தானின் 97 வயது தாய் ஜெட்ரூட் ஹோல்சர், சோனி ரஸ்தான், அவரது மகள்கள் ஆலியா பட், ஷாகீன் பட் மற்றும் ஆலியா பட்டின் பெண் குழந்தை ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 தலைமுறை பெண்கள் இடம்பெற்றுள்ள அந்த புகைப்படம் ரசிகர்களை கவர்ந்துள்ளது.

மேலும் அந்த பதிவில் சோனி ரஸ்தான், "எனது தாயாருக்கு 97 வயது ஆகிறது. இன்று அவரது பிறந்தநாள் கிடையாது, ஆனால் தனது பேத்தியின் 'ஆல்பா' திரைப்படம் ரிலீஸாக உள்ளதால், ஆலியாவை எனது தாய் வாழ்த்த விரும்பினார்.

எனது தாயார் ஜெட்ரூட் ஹோல்சர், உண்மையில் அவர்தான் ஓ.ஜி. ஆல்பா. அவர் 6 வயதாக இருக்கும்போது நாஜிக்களிடம் இருந்து தப்பி வந்தவர். அவர் யூதர் அல்ல, ஜெர்மன் நாட்டை சேர்ந்தவர்தான். இருந்தாலும், எனது தாத்தா மிகவும் துணிச்சலானர். அவர் ஹிட்லரை நேரடியாக எதிர்த்தார்.

இதன் காரணமாக அவர்கள் ஜெர்மனியை விட்டு தப்பிவர வேண்டிய சூழல் ஏற்பட்டது. சில ஆண்டுகள் செக் குடியரசு நாட்டில் வசித்த அவர்கள், ஒரு யூத குழந்தைகளுக்கான ரெயிலில் ஏறி இங்கிலாந்திற்கு தப்பிச் சென்றனர். எனது தாயார் தனது வாழ்க்கையில் பல துன்பங்களை சந்தித்துள்ளார்.

பின்னர் எனது தந்தை நரேந்திர ரஸ்தானை சந்தித்து, அவரை திருமணம் செய்து கொண்டு இந்தியாவில் புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார். 'ஆல்பா' பெண்கள் நம்மை சுற்றி பல்வேறு விதங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நமது தாய்மார்கள், பாட்டிமார்கள் எல்லோருமே 'ஆல்பா' பெண்கள்தான்" என்று தெரிவித்துள்ளார்.

# நடிகர்களை விட நடிகைகளுக்கே சவால்கள் அதிகம் நபா நடேஷ் பேட்டி



தெலுங்கு மற்றும் கன்னட சினிமாவின் முன்னணி நடிகையாக திகழ்ந்து வருகிறார், நபா நடேஷ். மாடல் அழகியும் கூட. இவரது நடிப்பில் சமீபத்தில் திரைக்கு வந்து ஓடிக் கொண்டிருக்கும் 'நாக பந்தம்' என்ற புராண படமும் இவருக்கு நல்ல பெயரை வாங்கி தந்திருக்கிறது. இந்தப் படம் மூலமாக பான் இந்தியா கதாநாயகியாகவும் உயர்ந்திருக்கிறார். விரைவில் தமிழ் படத்தில் நடிக்கப் போவதாகவும் பேச்சு அடிபடுகிறது.

இந்த நிலையில் பேட்டி ஒன்றில் கலந்து கொண்ட நடிகை நபாநடேஷ் தனது திரைப்பயணம் பற்றி பகிர்ந்து கொள்கிறார். "என் சினிமா பயணம் எதிர்பாராதது. நான் சினிமாவுக்கு வருவேன் என்று கொஞ்சம் கூட கற்பனை செய்து பார்த்தது கிடையாது. ஆனால் காலம் கொடுத்த அதிர்ஷ்டம், நான் சினிமாவில் இருக்கிறேன். 20க்கும் மேற்பட்ட படங்களில் நடித்திருந்தாலும், 'நாகபந்தம்' ரொம்பவே வித்தியாசமான படம். 'நாகபந்தம்' சாதாரண படம் அல்ல. நமது சனாதான தர்மத்தையும், வரலாற்று உண்மையையும் உள்ளடக்கிய படம். பொதுவாக எந்த படங்கள் திரைக்கு வந்தாலும், அதை ஓ.டி.டி.யில் பார்த்துக்கொள்ளலாமே என்று சாதாரணமாக இருந்து விடக்கூடாது. திரைப்படங்களை தியேட்டர்களுக்கு சென்று பார்த்து ரசிகர்கள் கொண்டாட வேண்டும். அதுதான் உண்மையான கொண்டாட்டம். தியேட்டர்களில் கிடைக்கும் அனுபவத்தை ரசிகர்கள் 'மிஸ்' செய்யக்கூடாது.

# ரொனால்டோவா? மெஸ்சியா? ஜெர்மனி ஜாம்பவான் ஆலிவர் கான் நச் பதில்



ரொனால்டோவா? மெஸ்சியா? என்ற கேள்விக்கு முன்னாள் ஜெர்மனி கோல் கீப்பர் ஆலிவர் கான் தனது கருத்தை பகிர்ந்துள்ளார்.

நீண்ட காலமாக நீடிக்கும் விவாதம்

கால்பந்து உலகில், கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லியோனல் மெஸ்சி ஆகிய இருவரில் யார் சிறந்த வீரர் என்ற விவாதம் பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து ஜெர்மனியின் முன்னாள் கோல்கீப்பர் ஆலிவர் கான் தனது கருத்தை பகிர்ந்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,

"கிறிஸ்டியானோ ரொனால்டோவும், லியோனல் மெஸ்சியும் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களாக, ஒருவரை ஒருவர் மிஞ்சும் வகையில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்துள்ளனர். அவர்கள் நீண்ட காலமாக வெளிப்படுத்திய ஆட்டம் உண்மையிலேயே அசாதாரணமானது" என்றார்.

மேலும் அவர் கூறுகையில், "அவர்களுக்கிடையேயான போட்டி வார்த்தைகளில் அல்ல, மைதானத்தில் வெளிப்படுத்திய ஆட்டத்தில்தான் இருந்தது. ஒவ்வொரு சீசனிலும் இன்னும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்ற உத்வேகத்தை இருவரும் ஒருவருக்கொருவர் ஏற்படுத்தினர். அந்த ஆரோக்கியமான போட்டியே, இருவரையும் கால்பந்து உலகின் உச்ச நட்சத்திரங்களாக உயர்த்தியது"என்று தெரிவித்தார்.

# "வைபவ் எப்போது அறிமுகம்?" கேள்வியை நிறுத்துங்கள்... புஜாரா வேண்டுகோள்



வைபவ் குறித்த கேள்வியை நிறுத்த வேண்டும் என்று இந்திய முன்னாள் வீர புஜாரா வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 02 என்ற கணக்கில் இழந்தது. இந்திய அணியில் இடம் பெற்றிருந்த இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷிக்கு ஒரு போட்டியிலும் வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதைத்தொடர்ந்து தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான டி20 தொடரின் முதல் போட்டியிலும் அவருக்கு விளையாட வாய்ப்பு கிடைக்கவில்லை.

இந்திய அணியில் இடம்பெற்றிருந்தாலும், தொடர்ந்து வாய்ப்பு கிடைக்காததால், "வைபவ் சூர்யவன்ஷி எப்போது இந்திய அணிக்காக அறிமுகமாகிறார்?" என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் அதிகமாக எழுந்து வருகிறது.

இந்த நிலையில், இந்திய அணியின் முன்னாள் வீரர் சேதேஷ்வர் புஜாரா, வைபவ் குறித்த கேள்வியை நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து பேசிய புஜாரா,

"வைபவ் சூர்யவன்ஷி இந்திய அணியில் எப்போது அறிமுகமாவார் என்று தொடர்ந்து கேட்பதை நிறுத்துங்கள். வெறும் 15வயதிலேயே இந்திய அணியில் இடம்பெற்றிருப்பதே மிகப்பெரிய சாதனை. ஆடும் லெவனில் இடம் கிடைக்கவில்லை என்றாலும், தினமும் மூத்த வீரர்களுடன் பயிற்சி செய்வது, சிறந்த பயிற்சியாளர்களிடம் இருந்து ஆலோசனைகள் பெறுவது, இங்கிலாந்தின் ஆடுகளங்கள் மற்றும் அங்குள்ள சூழ்நிலைகளை நேரடியாக அனுபவிப்பது போன்றவை வைபவின் எதிர்கால வளர்ச்சிக்கு மிகவும் உதவும்." என்றார்.

# டி20 கேப்டனாக அறிமுகமான முதல் போட்டியிலேயே தோற்ற 4 இந்திய வீரர்கள்



கேப்டனாக முதல் டி20 போட்டியில் தோல்வியடைந்த வீரர்கள் பட்டியலில் விராட், ரிஷப், கில் வரிசையில் தற்போது ஸ்ரேயாஸ் அய்யர் இணைந்துள்ளார்.

அயர்லாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான இந்திய அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டி20 தொடரை 02 என்றகணக்கில்இழந்தது. முதல்டி20போட்டியில்34ரன்கள்வித்தியாசத்தில் தோல்வியடைந்த இந்தியா, 2வது போட்டியிலும் வெற்றியை நழுவ விட்டது.

இந்த தோல்வியின் மூலம், சர்வதேச டி20 போட்டியில் கேப்டனாக அறிமுகமான முதல் போட்டியிலேயே தோல்வியடைந்த இந்திய கேப்டன்களின் பட்டியலில் ஸ்ரேயாஸ் அய்யரும் இடம்பிடித்துள்ளார். விராட் கோலி கேப்டனாக அறிமுகமான 2017ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான டி20 போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

ரிஷப் பந்த் 2022ம் ஆண்டு தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக கே.எல். ராகுலுக்கு பதிலாக கேப்டனாக செயல்பட்ட முதல் போட்டியிலேயே இந்தியா தோல்வியை சந்தித்தது.

ஷுப்மன் கில் கேப்டனாக அறிமுகமான 2024ம் ஆண்டு ஜிம்பாப்வேக்கு எதிரான டி20 போட்டியில் 13 ரன்கள் வித்தியாசத்தில் இந்தியா தோல்வியடைந்தது. இருப்பினும், அந்த தொடரை இந்தியா 41 என்ற கணக்கில் வென்றது.

தற்போது, அயர்லாந்துக்கு எதிரான தோல்வியின் மூலம் சர்வதேச டி20 போட்டியில் கேப்டனாக அறிமுகமான முதல் ஆட்டத்திலேயே தோல்வியை சந்தித்த 4வது இந்திய கேப்டனாக ஸ்ரேயாஸ் அய்யர் இணைந்துள்ளார். ஐபிஎல் தொடரில் வெற்றிகரமான கேப்டனாக பெயர் பெற்றிருந்தாலும், சர்வதேச டி20 கிரிக்கெட்டில் அவரது கேப்டன் பயணம் தோல்வியுடன் தொடங்கியுள்ளது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.